# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**தண்ணீர்பந்தம்பட்டி - 624 702, வேடசந்தூர், திண்டுக்கல்**

**website : www.gascvdr.ac.in** **E.Mail : gascvdr@gmail.com**

---

**பொருள்: வேடசந்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 'வாக்காளர் உரிமை-2026' விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் ஆண்டு மலர் வெளியீடு தொடர்பாக.**

வேடசந்தூர், ஏப்ரல் 10 : திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர், தண்ணீர்பந்தம்பட்டியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 'வாக்காளர் மன்றம்' (Electoral Literacy Club) சார்பில், "வாக்காளர் உரிமைகள் - 2026" என்ற தலைப்பில் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி (10.04.2026) திருவள்ளுவர் அரங்கில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் (மு. கூ. பொ) முனைவர் க. மா. சுமதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், தமிழ்த்துறைப் பேராசிரியர் திருமதி S. செந்தாமரைச்செல்வி வரவேற்புரையாற்றினார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்த நிகழ்ச்சியில், மாணவர்களிடையே தேர்தல் நடைமுறைகள் மற்றும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எரியோடு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் Dr. ஜெய வனிதா மணி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் தனது உரையில், ஜனநாயகக் கடமையான வாக்களிப்பதன் முக்கியத்துவத்தையும், இளம் வாக்காளர்கள் எவ்வாறு விழிப்புடன் செயல்பட வேண்டும் என்பதையும் விளக்கினார். மேலும், விழாவின் ஒரு பகுதியாக, கல்லூரியின் 2025-2026-ஆம் ஆண்டிற்கான ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. இதனை மருத்துவர் முனைவர் ஜெய வனிதா மணி வெளியிட, கல்லூரி முதல்வர் முனைவர் க. மா. சுமதி அவர்கள் அதனைப் பெற்றுக்கொண்டார். இந்த மலர் 2025 மற்றும் 2026-ஆம் கல்வியாண்டில் கல்லூரியின் செயல்பாடுகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் சாதனைகளை உள்ளடக்கிய தொகுப்பாகத் திகழ்கிறது. இந்த ஆண்டு மலர் வெளியீட்டு நிகழ்வானது, கல்லூரியின் வளர்ச்சி மற்றும் மாணவர்களின் படைப்பாற்றலை அங்கீகரிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது.

நிகழ்ச்சியின் இறுதியில், ஆங்கிலத்துறைப் பேராசிரியரும் வாக்காளர் மன்ற ஒருங்கிணைப்பாளருமான திரு. N. சரவணகுமார் நன்றி கூறினார். தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளைக் கல்லூரி நிர்வாகமும், வாக்காளர் மன்ற உறுப்பினர்களும் சிறப்பாகச் செய்திருந்தனர். இந்நிகழ்வில் ஏராளமான மாணவர்கள் காலந்து கொண்டு பயன்பெற்றனர்.